


திருச்சியில், மதுரை – சென்னையில் நடக்கும் ஹாக்கி ஆண்கள் ஜூனியர் உலகக்கோப்பை போட்டிக்கான கோப்பை திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கிற்கு நேற்று முன்தினம் கொண்டு வந்தபோது கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் அந்த கோப்பையை அறிமுகம் செய்து வைத்தார். இதில் மேயர் அன்பழகன், மாவட்ட ஆட்சியர் சரவணன், மாநகராட்சி கமிஷனர் மதுபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், காஜாமலை, விஜய், சித்ரா பாரி வள்ளல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.11.2025) சென்னையில் நடைபெற்ற 1.12.2025 முதல் 7.12.2025 வரை புதுதில்லியில் நடைபெற உள்ள இந்திய பிக்கில் பால் லீக் போட்டிக்கான (IPBL) தொடக்க அணிகளின் அறிவிப்பு விழாவில் பங்கேற்றார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி , தி டைம்ஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் வினீத் ஜெயின், குழு தலைமை நிர்வாக அலுவலர் என். சுப்பிரமணியன், இந்திய பிக்கில் பால் சங்கத்தின் தலைவர் சூர்ய வீர் புல்லர் மற்றும் அணி நிர்வாகிகள் மற்றும் பிக்கில் பால் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.

### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையில்

# நான்கைந்து ஆண்டுகளில் 1,12,203 பேர் பயன்பெற்றுள்ளனர்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் 220 பேருக்கு பதவி உயர்வு ஆணை வழங்கி தகவல்!

சென்னை, நவ.20 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (18.11.2025) சென்னை தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை கூட்டரங்கில், சமுதாய நல செவிலியர்கள், அலுவலக கண்காணிப்பாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகள் மற்றும் ஆய்வக நுட்புநர் (நிலை3) ஆகியோர்களுக்கு பணிநியமன ஆணைகள் என மொத்தம் 220 பேருக்கு பதவி உயர்வு மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**பதவி உயர்வு மற்றும் பணி நியமன ஆணை!**

மக்கள் நல்வாழ்வுத்துறையில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை ஒரு முக்கிய அங்கமாக இடம் பெற்றிருக்கிறது. இத்துறையில் 2,336 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 8,713 துணை சுகாதார நிலையங்க ளையும் 2,368 நகராட்சி, மாநகராட்சி சுகாதார நிலையங்களையும், 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களையும், 476 நடமாடும் மருத்துவ வாகனங்களையும், 395 பல் மருத்துவ சிகிச்சை முறைகளையும் பெற்றிருக்கின்ற ஒரு மிகப் பெரிய மகத்தான கட்டமைப்பு ஆகும். பொது சுகாதாரத்துறையில் மட்டுமே ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு புதிய பணி நியமன ஆணைகள் தருவது, பதவி உயர்வுகள் மற்றும் பணியிடமாறுதல், புதிய பணியிடங்களை உருவாக்குவது என்று அனைத்து நிலைகளிலும் வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப்பட்டு பணியாளர்களின் நலம் காக்கும் அரசாக இந்த அரசு இருந்து வருகிறது.

மேலும் புதிய பணிநியமனங்கள் தரும்போதே அவர்களுக்கு கலந்தாய்வு நடத்துவது, புதிய பணியிடங்களை உருவாக்குவது, அதுமட்டுமல்ல அவர்கள் பணியாற்றும் காலத்திலேயே தகுதிகளை கருத்தில் கொண்டு பதவி உயர்வுகள் தருவது என்கின்ற வகையில் இந்த துறையில் கடந்த 4.5 ஆண்டுகளாக ஏறத்தாழ இலட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

அந்த வகையில் இன்றைக்கு 160 பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சமுதாய சுகாதார செவிலியர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. மருத்துவத்துறையில் இருக்கின்ற 160 பகுதி சுகாதார செவிலியர்கள் பதவி உயர்வு பெறுவது இந்த துறையில் இதுதான் முதல் முறை. எனவே அந்தவகையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய பகுதி சுகாதார செவிலியர்கள் அனைவரும் சமுதாய சுகாதார செவிலியர்களாக பதவி உயர்வு பெறுகிறார்கள்.

பதவி உயர்வு என்பது வெறும் பணப்பலன் மட்டுமல்ல, சமூகத்தில் அவர்களுக்கான அந்தஸ்தை காட்டுவது. அவர்கள் பணியாற்றும் இடங்களில் அவர்களை தரம் பிரித்து காட்டுவது. அவர்களுடைய உழைப்பிற்கு அங்கீகாரம் தருவது. அந்த வகையில் இன்று 160 பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சமுதாய சுகாதார செவிலியர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் அமைச்சுப் பணி உதவியாளர்கள் 10 பேர்களுக்கு அலுவலக கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதோடுமட்டுமல்லாமல் 38 ஆய்வக நுட்புநர் நிலை 3, இதுநாள் வரை தொகுப்பூதியத்தில் இருந்தார்கள், அவர்களுக்கான நிரந்தர பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலமாக தொடர்ந்து பணிநியமனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த துறையில் காலிப்பணியிடங்களே இருக்க கூடாது என்கின்ற வகையில் நிலையை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ஒட்டுமொத்தமாக காலிப்பணியிடங்க ளை நிரப்பிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில் இன்று 12 ஆய்வக நுட்புநர்கள் நிலை 3 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு நடத்தப்பட்ட தேர்வில் தகுதியான 12 நபர்களுக்கு பணி ஆணைகள் தரப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இந்த நிகழ்ச்சியில் 220 பேர் பயன் பெறுகிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு புதிய பணி ஆணைகள் 4,519 உதவி மருத்துவர்கள், 48 பல் மருத்துவர்கள், 1091 மருந்தாளுநர்கள், 131 உணவு பாதுகாப்பு அலுவலர்கள் என்று 9,288 பேர் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் பணி ஆணைகளை கடந்த 4.5 ஆண்டுகளில் பெற்றிருக்கிறார்கள். இதுவரை எந்த அரசிலும் இவ்வளவு பணி ஆணைகள் வழங்கப்பட்டதில்லை.

அதோடுமட்டுமல்லாமல் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் 281 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. 3,009 ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். 3,253 தற்காலிக ஒப்பந்த செவிலியர்கள் நிரந்தர செவிலியர்களாக பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள்.

இதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மருத்துவ உளவியலாளர்கள், நேரடி உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், மருந்து ஆய்வாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள், புள்ளியியல் உதவியாளர்கள் என்று TNPSC சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு 2,261 பேருக்கு கடந்த 4.5 ஆண்டுகளில் பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதோடுமட்டுமல்லாமல் தேசிய நலவாழ்வு குழுமம் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட சுகாதார நல வாழ்வு சங்கம் - மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட சுகாதார அலுவலர் போன்றோர்களின் தலைமையின்கீழ் இதுவரை 14,272 பணிநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆக இதுவரை வெளிப்படைத் தன்மையுடன் புதிய பணியிடங்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 35,702 பேர். மேலும் பணியிடமாறுதலுக்கு வெளிப்படைத்தன்மையுடன் கலந்தாய்வு நடத்தி பணியிடமாறுதல் பெற்றவர்களின் எண்ணிக்கை 43,155 பேர். அந்த வகையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு பதவி உயர்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 15,566 பேர்.

மேலும் கொளத்தூர் பெரியார் அரசு மருத்துவமனை, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை போன்ற புதிய மருத்துவமனைகள், 11 புதிய அரசு மருத்துவக்கல்லூரிகள், 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 50 புதிய நகர்ப்புற மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்று ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மூலம் பெறப்பட்ட நிதி மூலம் கட்டப்பட்ட புதிய கட்டிடப் பிரிவுகளுக்கு தேவையான பணியிடங்கள், உலக வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு தேவையான பணியிடங்கள் என்று வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் 17,780 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆக ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வெளிப்படைத்தன்மையுடன் பயன் பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இன்று 220 பேருக்கு பதவி உயர்வு ஆணைகளும், பணி நியமன ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது.

**அமீபா மூளைக்காய்ச்சல் பாதிப்பு**

இரண்டு மாதங்களுக்கு முன்பாக இதுதொடர்பாக விழிப்புணர்வுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் பொது சுகாதாரத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக பொது சுகாதாரத்துறையின் சார்பில் விரிவான அறிக்கை பத்திரிக்கையாளர்களுக்கு தரப்பட்டுள்ளது.

கேரளாவில் மூளையை தின்னும் அமீபா என்னும் கொடிய நோய் பாதிப்பால் இறப்புகள் அதிகரித்து வரும் நிலையில் அதற்கான காரணம் என்று கண்டறியப்பட்டிருப்பது கேரளாவில் இருக்கின்ற குளம், குட்டை போன்ற நீண்ட நாட்கள் தேங்கி இருக்கின்ற மாசு படிந்த நீரில் குளிப்பது என்பது. இந்த குளங்கள் தூர்வாரப்படாமல் சேறு நிறைந்த அழுக்கு படிந்த அந்த நீரில் குளிப்பதனால் அவர்களின் மூக்கு வழியாக வைரஸ் மூளையில் நுழைந்து காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.

எனவே மாசுபடிந்துள்ள குளங்களில் குளிக்க தவிர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாவட்ட சுகாதார அலுவலர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சபரிமலைக்கு ஆன்மீக சுற்றுலா செல்பவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் கேரளா மாநில அரசும், தமிழ்நாடு அரசும் வழங்கி வருகிறது.

**நீட் தேர்வு விலக்கு**

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் அனைவரும் நன்றாக அறிவர். நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையிலான குழு ஒன்று அமைத்து, அந்த குழுவின் பரிந்துரைகளை பெற்று, சட்டமன்றத்தில் மசோதாவாக நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பி வைத்தோம். ஆளுநர் இந்த மசோதாவினை கிடப்பிலே போட்டு திருப்பி அனுப்பி விட்டார்கள்.

முதல்வர் அவர்கள் ஒன்றிய பிரதமர் அவர்களை நேரிடையாக சந்தித்து நீட் தேர்வு விலக்கு தர வேண்டும் என்று 2 முறை வலியுறுத்தியிருக்கிறார். நானும் கூட 10 முறை ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இந்த நிலையில் முதல்வர் அவர்கள் மீண்டும் சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தார்கள்.

சட்டமன்றத்தில் ஆளுநர் தவிர்க்கவே முடியாத காரணத்தினால் குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பினார்கள். உள்துறை அமைச்சகம் தமிழ்நாட்டில் இருக்கின்ற உயர்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஆயுஷ் இந்திய மருத்துவம் போன்ற துறைகளுக்கு 8 முறை தெளிவுரை கேட்டு அனுப்பினார்கள்.

முதல்வர் அவர்கள் சட்டத்துறை வல்லுநர்களுடன் கலந்து பேசி அதற்குரிய பதில்களை உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பினார்கள். கேட்ட தெளிவுரைகளையே திரும்ப திரும்ப கேட்டார்கள். அதையும் சட்டவல்லுநர்களுடன் கலந்து பேசி திரும்ப அனுப்பினோம்.

இந்நிலையில் குடியரசுத் தலைவர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னாள் அதனை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் உடனடியாக இங்கு அனைத்து கட்சிக் கூட்டத்தை கூட்டினார்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் நிறுத்தி வைக்கப்பட்டது. பிப்ரவரி 27 ஆம் தேதி. முதல்வர் அவர்கள் ஏப்ரல் 9 ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தை தமிழ்நாட்டில் கூட்டி குடியரசுத் தலைவர் அவர்களின் இந்த செயலுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம் என்று முடிவெடுக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. இப்போதுமட்டுமல்ல ஏற்கெனவே ஒரு வழக்கும் போடப்பட்டது. அது ஒன்றிய அரசு நீட் மசோதாவிற்கு எதிரான உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த நிலையில்தான் குடியரசுத் தலைவர் இந்த சட்ட மசோதாவை நிறுத்தி வைத்திருக்கும் காரணத்தினால் அதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆக 2 வழக்குகள் முதல்வர் அவர்களால் நீட் தேர்விற்கு எதிரான வழக்கும், குடியரசுத் தலைவர் சட்டமசோதாவை நிறுத்தி வைத்திருப்பதற்கு எதிராக ஒரு வழக்கும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆக சட்டப் பூர்வ நடவடிக்கைகளையும் முதல்வர் அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

இதுமட்டுமல்லாமல் நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையிலான அறிக்கையை கூட இந்தியாவில் இருக்கின்ற 9 மாநிலங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுகி இந்தியாவில் இருக்கின்ற ஒட்டுமொத்த மாநிலங்களையும் ஒருங்கிணைத்து நாம் எடுக்கின்ற நடவடிக்கைகளை தெரிவித்திடும் வகையில் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர்கள் மரு.சம்பத், மரு.தேவ பார்த்தசாரதி மற்றும் இணை இயக்குநர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வனத்துறை சார்பாக

# பள்ளி ஆசிரியர்கள் - மாணவர்களுக்கான 'வனமும் வளமும்' பயிற்சி!

## அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார்!

சென்னை, நவ.20-

பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (18.11.2025) வனத்துறை சார்பாக திருவண்ணாமலை வன விரிவாக்க மையத்தில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வனமும் வாழ்வும் பயிற்சியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், மாவட்ட வன அலுவலர் சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வனத்துறை சார்பாக பல்லுயிர் பன்மம், வனப்பாதுகாப்பு, காட்டுத் தீ மேலாண்மை, வன உயிரின கணக்கெடுப்பு மற்றும் மனித விலங்கு மோதல்கள் ஆகிய வன குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வனமும் வாழ்வும் என்கின்ற பயிற்சி வகுப்புகளை பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைகள் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமு கங்கள் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றியதாவது: -

"மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்" என்ற முத்தமிழறிஞர் கருணாநிதி அவர்களின் எண்ணத்தை செயலாக்கும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ள வனத்தை வளர்க்க வேண்டும் வனத்தை பாதுகாக்க வேண்டும் என்பதை இலக்காக கொண்டு வனத்துறையின் வளர்ச்சியை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றி வருகிறார்.

தமிழ்நாட்டின் பசுமை பரப்பை 23.7 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்துவதற்கு பசுமை தமிழ்நாடு இயக்கம் 2021-ல் துவக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் மூலம் கடந்த 3 வருடங்களில் 10 கோடியே 86 இலட்சம் மரக்கன்றுகள் நட்டு 1 இலட்சத்து 73 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு பசுமையாக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வனத்துறை மற்றும் பிறத்துறைகளின் மூலம் 62 இலட்சத்து 71 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை சார்பாக கலைஞர் நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மேலும் சாலை பணிகளின் போது ஒரு மரம் வெட்டினால் அதற்கு ஈடாக 10 மரங்கள் நட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை ரீதியாக தணிக்கை ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுகிறது. அந்த ஆய்வுகளில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக எவ்வளவு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன, பராமரிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டு வருகிறேன்.

வனத்துறை சார்பாக வனப் பாதுகாப்பு குறித்து எதிர்கால தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் பள்ளி மாணவர்களிடமிருந்தே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பல்வேறு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. வனமும் வளமும் திட்டத்தின் வாயிலாக ஆசிரியர்கள் மூலமாக மாணாக்கர்களுக்கு பசுமை பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும், நாட்டிலே பசுமையை உருவாக்குவது மூலமாக நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்பு பற்றிய புரிதலும் தெளிவும் பள்ளி பருவத்திலேயே மேம்பட உதவுகிறது.

வனங்களால் ஆக்ஸிசன் உற்பத்தி, காலநிலை கட்டுப்பாடு, மண் அரிப்பை தடுப்பது, நிலத்தடி நீரை பாதுகாப்பது, பறவைகள் விலங்குகள் மற்றும் தாவரங்களை காப்பது போன்ற சிறந்த செயல்பாடுகளை கொண்டதாகும். மேலும் வன பாதுகாப்பால் பொருளாதார சார்ந்த பயன்களான மரப்பொருட்கள், மருந்து பொருட்கள், சுற்றுலாத்துறை வளர்ச்சி மற்றும் சமூக மற்றும் மனித நலன் சார்ந்த கிராமம் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கை தரம் உயர்வு, காற்றுத்தன்மை மேம்பாடு ஆகிய சிறப்புகளை கொண்டதாகும்.

மேலும் இந்த பயிற்சி திட்டம் மூலம் மாநிலம் முழுவதும் 20,000 மாணவ, மாணவியர்கள் வனமும் வாழ்வும் குறித்த விழிப்புணர்வு பெற்று பயன் பெறுவார்கள். ஆகவே இந்த பயிற்சியினை நன்கு பயன்படுத்தி மாணவர்களையும் பசுமை பாதையில் கொண்டு செல்ல ஆசிரியர்களிடம் பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் டாக்டர். ஆர். மணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், வன சரக அலுவலர் ராமநாதன், வனத்துறையினர், ஆசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சவுதி அரேபியாவிற்கு புனித உம்ரா பயணம் மேற்கொண்ட

# ஐதராபாத்தைச் சேர்ந்த யாத்ரீகர்கள் 45 பேர் பேருந்து விபத்தில் உயிரிழப்பு!

## இ.யூ.முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் இரங்கல்!

திருச்சி, நவ. 20 -

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது :

சவுதி அரேபியாவில் உள்ள மெக்கா, மதினாவுக்கு புனித உம்ரா பயணம் மேற்கொண்ட ஐதராபாத்தைச் சேர்ந்த யாத்ரீகர்கள் 45 பேர், பேருந்து விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு துக்கமும் துயரமும் அடைந்தேன்.

இஸ்லாமிய மார்க்கத்தில் ஐந்தாவது புனித கடமையான புனித ஹஜ் பயணம் இருக்கிறது. மற்ற நாட்களில் முஸ்லிம்கள் மெக்கா, மதினாவுக்குச் சென்று கஃபாவை வலம் வந்து, மற்றுமுள்ள புனித இடங்களில் பிரார்த்தனையில் ஈடுபடுவதை 'உம்ரா' பயணம் என்று அழைக்கின்றனர். புனித உம்ரா பயணம் மேற்கொண்ட ஐதராபாத் சேர்ந்த பயணிகள் 45 பேர் திருமக்காவில் இருந்து நபிகள் நாயகம் அடங்கி யிருக்கும் மதினாவை நோக்கிப் பயணித்த தருணத்தில் யாத்ரீகர்கள் சென்ற பேருந்து மீது டாங்கர் லாரி மோதியதால் உம்ரா யாத்ரீகர்கள் 45 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பலியாகிய துயரச் சம்பவம் நெஞ்சை உலுக்குவதாக உள்ளது. இந்த துயரச் செய்தி அறிந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் பொது வாழ்வில் உள்ள அனைத்து இயக்கத்தவர்களும் தங்களின் ஆழ்ந்த துயரங்க ளைத் தெரிவித்து இருக்கின்றனர்.

புனித உம்ரா பயணிகளின் மரணச் செய்தி உலக முஸ்லிம்களின் இதயங்களை மட்டுமின்றி உலக மக்களின் இதயங்களையும் உலுக்கிய இருக்கிறது. மறைந்தவர்கள் இறையருளுக்கு உரியவராகவும் அவர்களை இழந்திருக்கும் அவர்தம் குடும்பத்திருக்கு இறைவன் ஆறுதலையும் பொறுமையையும் தந்து அருள் புரியவும் எல்லோ ரும் வேண்டுவோம். உலகம் அமைதி யில் செல்லவும், எல்லாக் காலங்களிலும் இறையருள் எங்கும் சூழ்ந்திருக்கவும் வேண்டுவோம்.

ஐதராபாத் மல்லேபல்லி, பஜார் காட், ஆசிஃப் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இஸ்லாமிய குடும்பத்தாருக்கு அவர்களது பிரிவை தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியை அல்லாஹ் கொடுப்பானாக என்று பிரார்த்திப்போம். அவர்களது பிழைகளை பொறுத்துக் கொண்டு ஜன்னத்துல் பிர்ஃதெளஸ் என்னும் பேராணந்த பெரும் வீட்டை இறைவன் அவர்களுக்கு வழங்குவானாக அவர்களின் மறைவால் வாடும் அவர்களது மக்கள் உற்றார் உறவினர்கள் அனை வருக்கும் சபுரன் ஜமீலன் என்னும் அழகிய பொறுமையை வழங்கு வதற்கு இறைஞ்சுவோம். எனது சார்பிலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மத்திய மாவட்டக் கழக அலுவலகமான முரசொலி மாறன் வளாகத்தில், வாக்காளர் திருத்தப்பட்டியல் (S.I.R) குறித்து, தெற்கு சட்டமன்றத் தொகுதி, நல்லூர் பகுதி, பெரிச்சிபாளைம் பகுதி, தென்னம்பாளையம் பகுதி, வார்டு எண் : 46,47,48,49,55,56,51,52 ஆகிய வட்டத்திற்குட்பட்ட பாக முகவர்கள் (BLA 2) மற்றும் பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், தொகுதி பார்வையாளர் ப.ராம்குட்டி (எ) ராமமூர்த்தி உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், பூத் கமிட்டி ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.